5

# இயேசு, மோசேயின் மீதும் நியாயப்பிரமாணத்தின் மீதும் ஆண்டவராக இருக்கிறார்

புதிய ஏற்பாடு நிறைவான அதிகாரத்துவத்தை உரிமைகோரினாலும், அதை ஒரு நிறைவான அதிகாரத்துவம் உடையதாக எல்லாரும் நடத்துவதில்லை. இயேசுவைப் பற்றிய அதன் கூற்றுக்களினாலோ அல்லது எல்லா மக்களுக்கு மான ஏவுதல் பெற்ற அவரது போதனையாக அது இருக்கிறது என்ற உரிமை கோருதலினாலோ சிலர் நம்பி இணங்காது உள்ளனர். மற்றவர்கள் இந்த உரிமை கோருதல்களை ஏற்றுக்கொள்கின்றனர் ஆனால் நடைமுறை அளவில் புதிய ஏற்பாட்டின் அதிகாரத்துவத்தை மறுத்து அதன் போதனைகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கின்றனர். வெளிப்படுத்துதல்கள், புதிய ஏற்பாட்டுக் காலத்திற்குப் பின்பு தரப்பட்டு இன்றைய நாட்களுக்கு அதிகாரத்துவம் அற்றவைகளாக உள்ளன என்று பொய்யாகக் குற்றம் சாட்டுகின்றனர். அந்தக் கருத்தை நாம் அடுத்த பாடத்தில் ஆராய்வோம். மற்றவர்கள் பழைய ஏற்பாட்டு விசுவாசத்தைப் புதிய ஏற்பாட்டு அதிகாரத்துவத்திற்குச் சமமானதாகக் கருதி அதைப் பின்பற்றுகின்றனர். இந்தப் பாடத்தில் நாம், அந்த நடைமுறை ஏன் தவறானதாக உள்ளது - இயேசு ஏன் மோசேயின்மீதும் நியாயப்பிரமாணத்தின்மீதும் ஆண்டவராக இருக்கிறார் - என்பதைப் பற்றிக் காண்போம்.

மத்தேயு 5:17ல் இயேசு ‘‘நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்” என்று கூறினார். “நிறைவேற்றுகிறதற்கு” என்பது, “நிறைவாக்குவதற்கு” என்று அர்த்தப்படுகிற *pleroo* என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது. இவ்வார்த்தை ஒரு குறிப்பிட்ட காலகட்டம் முடிவடைவதை, தொடங்கப்பட்டுள்ள ஒரு சில விஷயங்கள் நிறைவேற்றப்படுதலை (தீர்க்கதரிசனம் ஒன்றில் உள்ளபடி), சிலவிஷயங்களை வடிவமைக்கப்பட்ட ஒரு முடிவுக்குக் கொண்டுவருதலை அல்லது ஒரு செயல்பாட்டின் தொடக்கத்தில் இருந்து அதில் ஈடுபட்டுள்ளவர், அந்தச் செயல்பாட்டை நிறைவு செய்தலைக் குறிக்கக் கூடும்.[1] இந்த அர்த்தங்கள் யாவும், இயேசு பழைய ஏற்பாட்டை எவ்வாறு “நிறைவேற்றினார்” என்ற சிந்தித்தலில் ஏற்புடையவைகளாக உள்ளன. ரோமர் 10:4ல் பவுல், “விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்” என்று கூறினார். “முடிவு” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *telos* என்ற கிரேக்க வார்த்தை, “நிறைவேற்றுதல்” என்பதைப் போலவே, சிலவற்றை முடித்துவைத்தல் என்ற கருத்திற்குத்

தொடர்பான பலவகையான அர்த்தங்களைக் கொண்டுள்ளது. இவ்விடத்தில் ஒரு விஷயமானது அது எந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுதல் என்ற கருத்து உள்ளது.[2] கிறிஸ்துவுக்குள் தேவன், தமது வாக்குத்தத்தங்களைக் காத்துக்கொண்டு, பாவத்தில் இருந்தும் அதன் விளைவுகளில் இருந்தும் மக்களைக் காப்பதற்கான தமது திட்டத்தை நிறைவு செய்தார்.

தேவன் எப்போதுமே எல்லா மக்கள் மீதும் அக்கறை கொண்டவராக இருந்துள்ளார் என்று பழைய ஏற்பாடு காண்பிக்கிறது. அது, தேவனுக்குக் கனம் செலுத்துதல் மற்றும் அயலகத்தவரைத் தக்க வகையில் நடத்துதல் போன்ற அழியாத கொள்கைகளை நிலைநாட்டுகிறது. புதிய உடன்படிக்கையில் உள்ள போதனைகளுக்கு அடியில் சுழலும் சக்கரமாகப் பழைய ஏற்பாடு பணிசெய்கிறது.[3] இயேசுவின் "கடைசி உயில் மற்றும் ஏற்பாட்டினால்" (காண்க எபிரெயர் 9) இடம் மாற்றப்பட்ட, பழைய ஏற்பாட்டின் குறிப்பிட்ட வரையறைகள் இனியும் நம்மைக் கட்டுப்படுத்துவது இல்லை. இருப்பினும் பரலோகத்தில் ஏற்கனவே கட்டுப்பட்டு மற்றும் கட்டவிழ்க்கப்பட்டுள்ளவற்றைக் கட்டவும் கட்டவிழ்க்கவுமான அதிகாரத்தை இயேசு யாரிடத்தில் ஒப்புவித்தாரோ, அவர்களால் இந்தக் கொள்கைகள் உறுதிப்படுத்தப்பட்டன (காண்க ரோமர் 13:8-10). அத்துடன் கூடுதலாக, பழைய ஏற்பாடானது தேவனுடைய இயல்பு மற்றும் மக்களுடன் அவரது இடைப்படுதல் ஆகியவற்றைப் பற்றிய முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்தவர்களுக்குப் பழைய ஏற்பாடு இனியும் மதிப்புள்ளதாக இருப்பதில்லை என்று நாம் கூறக்கூடாது, ஆனால் கிறிஸ்தவ விசுவாசத்தைப் போதித்தல் மற்றும் அதை நடைமுறைப் படுத்துதல் என்ற பகுதியில் அல்ல, அறிவுறுத்துதல் என்ற பகுதியிலேயே அது அதிகாரத்துவம் உடையதாக உள்ளது.

## பழைய ஏற்பாட்டின் பணிப்பொறுப்பு

புதிய ஏற்பாட்டில் முன்வைக்கப்பட்டபடி இயேசுவின் அதிகாரத்துவம், பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணங்களை இடம் மாற்றுகிறது. இந்த சத்தியத்தை ஒப்புக்கொள்ளத் தவறுதல், பழைய ஏற்பாட்டின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளுதலில் குறைபாட்டைப் பிரதிபலிக்கிறது. எனவே நாம் பழைய ஏற்பாட்டின் பணிப்பொறுப்பைக் கண்ணோக்குவோமாக.

பழைய ஏற்பாடு இஸ்ரவேல் மக்களினத்தைப் பற்றி அக்கறை கொண்டுள்ளது என்பது தெளிவாக இருக்கையில், அந்த மக்களினம் மனித குலத்திற்கு ஒரு இரட்சகரைக் கொண்டு வரத் தேர்ந்துகொள்ளப்பட்டதாக இருந்தது. ஆதியாகமம் 12:1-3, 7ல் தேவன் ஆபிராமிடத்தில் மூன்று மாபெரும் வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தினார். ஆபிராமின் சந்ததியார் ஒரு பெரிய மக்களினமாவார்கள் என்றும் இந்த வாக்குத்தத்தங்களைத் தேவன் ஆபிராமிடத்தில் கொடுத்த வேளையில் அவர் வாழ்ந்து கொண்டிருந்த கானான் தேசத்தில் அவர்கள் வாழ்வார்கள் என்றும் [தேவன்] ஆபிராமுக்கு வாக்குத்தத்தம் செய்தார். ஆபிராமின் சந்ததி வழியாக எல்லா மக்களினமும் பின்வரும் நாட்களில் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்றும் அவர் [தேவன்] அறிவித்தார்.

ஆதியாகமம் 12க்கு முந்திய பதினோரு அதிகாரங்களும், இந்த உலகமும் மனிதகுலமும் எங்கிருந்து வந்தன மற்றும் தேவன் நம்மைப் பாவத்தில்

இருந்து மீட்க வேண்டியது அவசியமானது ஏன் என்று விளக்குகின்றன. ஆதியாகமம் 12ஐத் தொடர்ந்து வரும் பழைய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதி, ஆபிராமிடத்தில் தேவன் ஏற்படுத்திய இந்த மூன்று வாக்குத்தத்தங்களை எவ்வாறு காத்துக்கொண்டார் என்று காண்பிக்கின்றன. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டிற்கு வழி கொடுக்கையில், அந்த வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றம் தொடருகிறது. இஸ்ரவேலே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மக்களினமாக இருந்தது. ஆதியாகமம் 12ல் ஆபிராம் அல்லது ஆபிரகாம் குடியமர்ந்த நாடே அந்த மக்களினத்தின் சொந்த நாடாக இருந்தது. அந்த மக்களினத்தில் இருந்து, எல்லா மக்களையும் தேவன் யார் மூலமாக ஆசீர்வதித்தாரோ, அந்த நாசரேத்தூர் இயேசு என்பவர் வந்தார். இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார் (காண்க எபிரெயர் 1:1, 2), ஆனால் அவர் இஸ்ரவேலில் இருந்த ஒரு இளம் பெண்ணின் மகனாகவும் இருந்தார் (மத்தேயு 1:18-25; லூக்கா 1:26-38; 2:1-7; கலாத்தியர் 4:4), மற்றும் இவ்வாறாக அவர் ஆபிரகாமின் சந்ததியாக இருந்தார்.

எனவே, கிறிஸ்துவின் வருகைக்குத் தேவனுடைய திட்டமிடுதலும் தயாரிப்பும் என்பதே பழைய ஏற்பாட்டின் கவனக்குவிப்பாக உள்ளது. தேவன் தமது திட்டத்தை, "ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய்" (யாத்திராகமம் 19:6ஆ) இருக்கும் ஒரு மக்களினத்தின் மூலம் நிறைவேற்றினார். இந்த சொற்றொடர் இரண்டு கொள்கைகளை வலியுறுத்துகிறது. பரிசுத்த மக்களினம் என்ற வகையில் இஸ்ரவேல், தேவனுடைய மக்களாக இருத்தல் என்றால் எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை உதாரணப்படுத்தி, தனித் தன்மை உடையதாக இருக்க வேண்டியிருந்தது. ஆசாரிய ராஜ்யம் என்ற வகையில் இஸ்ரவேல், தேவனுக்கும் - தேவன் தமது குமாரனை உலகத்திற்குக் கொண்டு வருதல் என்ற முக்கியமான ஊழியத்திற்குத் தேர்ந்துகொள்ளப் பட்டிராதிருந்த - உலகத்தின் எஞ்சிய மக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக இருக்க வேண்டியிருந்தது.

யாத்திராகமத்தின் இடையில், மோசேயின் நியாயப்பிரமாணத்தை (அல்லது உடன்படிக்கையை) கொடுத்த நிகழ்வுடன் நாம், அந்த மக்களினமானது முறைப்படி ஒருங்கமைக்கப்பட்டதையும் அதன் நோக்கம் அறிவிக்கப்பட்டதையும் காணுகிறோம். மோசேயின் மூலமாகத் தரப்பட்ட நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் மக்களை மாத்திரமே நோக்கங் கொண்டிருந்தது மற்றும் அது தேவனுடைய திட்டத்தைத் துரிதப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. மேலும், மோசேயின் நியாயப்பிரமாணம் நிரந்தரமாக இருக்கும்படிக்கு ஒருக்காலும் நோக்கங்கொண்டிருக்கவில்லை. இந்த உண்மைகளைப் பின்வரும் வசனப்பகுதிகள் விவரிக்கின்றன:

> அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, *ஜனங்களின்மேல்* தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து *கர்த்தர் உங்களோடே* பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான் (யாத்திராகமம் 24:8; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

> ஆகையால், *இஸ்ரவேல் புத்திரர்* தங்கள் தலைமுறைதோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி, அதைக் கைக்கொள்ளக்கடவர்கள். *அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்;* ஆறுநாளைக்குள்ளே கர்த்தர்

*வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார் (யாத்திராகமம் 31:16, 17; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

*இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரேமியா 31:31-34; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

இந்த வசனப் பகுதிகள், பழைய ஏற்பாடு ஒரு குறிப்பிட்ட நோக்கம், காலம் மற்றும் மக்கள் ஆகியவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றன. இந்தப் புரிந்து கொள்ளுதலுக்கான சாட்சியம், யூதமக்களின் நடைமுறையிலேயே காணப்படுகிறது. அவர்களின் வரலாறு, குறிப்பாக கி.பி. முதல் நூற்றாண்டின்போது அவர்களின் வரலாறு, அவர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுடன் நியாயப்பிரமாணத்தைக் கண்ணோக்கினார்கள் என்று காண்பிக்கிறது. யூதத்துவம் பரவுகையில், யூதரல்லாத அல்லது புறஜாதியாராக இருந்த பலர், உண்மையான ஒரே தேவனை ஆராதிக்க விரும்பினர். இதை யூதர்கள் அனுமதித்தனர், ஆனால் சில முக்கியமான கட்டுப்பாடுகளுடன் இதை அவர்கள் அனுமதித்தனர். இந்தக் கட்டுப்பாடுகள், யூதமார்க்கத்து அமைந்த செயல்முறைகளினூடே கடந்து யூதத்துவத்திற்கு மாற்றப்பட்ட புறஜாதியாருக்கு மாத்திரமே விலக்கப்பட்டன. நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் மக்களை மாத்திரம் நோக்கங் கொண்டிருந்தது என்று யூதர்கள் அறிந்திருந்த காரணத்தினால் இந்தச் செயல்முறைகளை அவர்கள் வலியுறுத்தினர்.

## புதிய ஏற்பாடு: உடன்படிக்கைகளின் மாற்றம்

ஆண்டவர் என்ற வகையில், சகல அதிகாரமும் கொண்டவரான இயேசுவின் வருகையானது, பழைய ஏற்பாடு இனியும் எவரொருவரையும் கட்டுப்படுத்துவதில்லை என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. எபேசியர் 2ம் அதிகாரத்தில் பவுல், தமது போதனையை இந்த சத்தியத்தின் அடிப்படையில்

புறஜாதி வாசகர்களை ஊக்குவிக்கும்படி அமைத்தார். இயேசு வருவதற்கு முன்னர் அவர்கள் இருந்த நிலையை அவர்களுக்கு அவர் நினைவூட்டினார்:

> அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும் வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள் (வசனங்கள் 12, 13).

கிறிஸ்து, "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணியிருந்தார்" (வசனம் 15) என்பதே இந்த மாற்றத்திற்குக் காரணமாக இருந்தது. நியாயப்பிரமாணமானது புறஜாதியாரைப் பழைய ஏற்பாட்டின்கீழ் "இஸ்ரவேலுடைய காணியாட்சியிலிருந்து" பிரித்திருந்தது, ஆனால் நியாயப்பிர மாணமானது விசுவாசத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டி என்ற வகையில் இடம் மாற்றப்பட்டிருந்தது என்று பவுல் கூறினார்.

கிறிஸ்துவில் கொண்டிருந்த விசுவாசத்தைக் கைவிடும் விளிம்பில் இருந்த யூதத்துவக் கிறிஸ்தவர்களை ஊக்குவிக்கும்படி எழுதப்பட்ட, எபிரெயருக்கு எழுதிய நிருபமானது, பழைய உடன்படிக்கையில் இருந்து புதிய உடன்படிக்கைக்கு மாறுதல் மீது கவனம் குவிக்கிறது. எபிரெயர் 8:8-12ல் ஏவுதல் பெற்ற எழுத்தாளர், முதலாம் உடன்படிக்கையானது பிழையற்றதாக இருக்கவில்லை, மற்றும் அது இடம் மாற்றப்பட வேண்டியதாக இருந்தது என்று நிரூபிக்க, எரேமியா 31:31-34ஐ மேற்கோள் காண்பித்தார். 13ம் வசனத்தில் அவர், பின்வருமாறு தொகுத்துரைத்தார்: "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது." பழைய உடன்படிக்கையானது, இயேசு கிறிஸ்துவின் மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்ட புதிய உடன்படிக்கையினால் இடம் மாற்றப்பட்டது (காண்க எபிரெயர் 9:15-17; 10:8-10).

கிறிஸ்து மோசேயைக் காட்டிலும் மேலானவர் என்ற எழுத்தாளரின் முந்திய போதனையின் கண்ணோக்கில், உடன்படிக்கைகளின் மாற்றம் மற்றும் இயேசுவின் வருகை ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பு எதிர்பார்க்கப்பட வேண்டியதாக உள்ளது.

> இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்; மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். வீட்டை உண்டுபண்ணினவன் வீட்டைப்பார்க்கிலும் அதிக

> கனத்திற்குரியவனாயிருக்கிறான்; அதுபோல மோசேயைப்பார்க்கிலும் இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராயிருக்கிறார். ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன். சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்; நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், நாமே அவருடைய வீடாயிருப்போம் (எபிரெயர் 3:1-6).

செய்தி தெளிவானதாக உள்ளது: தேவனுக்கு முன்பாக மக்கள் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதை ஆளுகை செய்யும் கட்டுப்படுத்துகிற உடன்படிக்கை என்ற வகையில் பழைய ஏற்பாடானது இனியும் செயல்விளைவு கொண்டிருப்பதில்லை. இயேசு மோசேயின் மீது ஆண்டவராக இருக்கிறார்.

## முடிவுரை

இது, பழைய ஏற்பாடு நமக்கு இனியும் எந்த மதிப்பையும் கொண்டிருப்ப தில்லை என்று அர்த்தப்படுகிறதா? இல்லை. அதன் பக்கங்களை நாம் படிக்கையில், தேவனுடைய பண்பைப் பற்றியும், மக்கள் அவருடன் ஒரு உடன்படிக்கையில் பிரவேசிக்கையில் அவர் எதிர்பார்ப்பது என்ன என்பதைப் பற்றியும் நாம் அதிகமாகப் புரிந்து கொள்கிறோம். கிறிஸ்துவுக்காக ஆயத்தமாவ தற்குத் தேவைப்பட்டது என்ன மற்றும் அந்த ஆயத்தம் ஏன் தேவைப்பட்டது என்பதையும் நாம் காணுகிறோம். விசுவாசம் நிறைந்தவர்களைத் தேவன் எவ்வாறு நடத்தினார் என்பதைக் காணுவதினாலும் அவர் தமது வாக்குத் தத்தங்களைக் காத்துக்கொள்கிறார் என்று அறிவதினாலும் நாம் தைரியம் அடைகிறோம். இதற்கு நேர் எதிரான நிலையில், தேவனுடைய வார்த்தைகளைத் தீவிரமானவையாக எடுத்துக்கொள்ளாதபோது என்ன நடக்கிறது என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

இந்த விஷயங்கள் உண்மையானவைகளாக இருந்தபோதிலும், வாழ்வு மற்றும் ஆராதனை ஆகியவற்றிற்கான பழைய ஏற்பாட்டின் குறிப்பிட்ட கட்டளைகளும் முறைமைகளும் இன்றைய நாட்களில் மக்களைக் கட்டுப்படுத்துவதில்லை. முதலாம் உடன்படிக்கையானது தனது நோக்கங்களை நிறைவேற்றி விட்டது: கிறிஸ்துவுக்காக உலகத்தைத் தயார்செய்தல், தேவனுடனான உறவில் வாழுதல் எதை அர்த்தப்படுத்துகிறது என்று காண்பித்தல், மற்றும் தேவனுடைய கிருபை எவ்வளவாகத் தேவையாக உள்ளது என்று விளக்கப்படுத்துதல். இருப்பினும் இப்போது, சகல அதிகாரமும் இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது (மத்தேயு 28:18). அவர்மூலமாக உலகம் நியாயந்தீர்க்கப்படுவதற்குத் தேவன் அவரை நியமித்துள்ளார் (நடபடிகள் 17:30, 31). நாம் இயேசுவின் வார்த்தைகளினால் நியாயந்தீர்க்கப்படுவோம் என்று இயேசு கூறியபோது அவர் இதை அறிந்து இருந்தார் (யோவான் 12:48). அவரது உடன்படிக்கையுடன், மோசேயின் நியாயப்பிரமாணம் உட்பட, வேறு எந்த உடன்படிக்கையையும் ஒட்டவைக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவனைச் சேவிப்பதில் நாம் எதைச் செய்தாலும்

*அது அவருடைய நாமத்திலேயே செய்யப்பட வேண்டும் (கொலோசெயர் 3:17). அவரே, "வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்" (யோவான் 14:6ஆ), அவருடைய நாமத்தினாலேயே நாம் இரட்சிப்பை உரிமைகோர முடியும் (நடபடிகள் 4:10-12). நாம் அவருக்கு முன்பாகப் பணிந்து, மோசேக்கும் ஆண்டவர் என்ற வகையில் அவரை சேவிக்கக் கடவோம்.*

---

*குறிப்புகள்*

[1]*இது பின்வரும் புத்தகத்தில் காணப்படும் விளக்கங்களின் தொகுப்புரையாகும்:* Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d. ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 827-29. [2]Ibid., 998 *இல் வில்லியம் பார்க்ளே என்பவர், telos என்பதன் பெயர் உரிச்சொல் வடிவமான teleios என்பதை பற்றி மத்தேயு 5:48ல் ("பூரண" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள) இவ்வார்த்தையின் மீதான தமது விளக்கங்களைக் கலந்துரையாடி இருக்கிறார்.* (William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, rev. ed., The Daily Study Bible Series [Philadelphia: Westminster Press, 1975], 177-78.) [3]*பழைய ஏற்பாட்டின் பணிப்பொறுப்பை, குறிப்பாக ஓய்வுநாள் பற்றி அதன் பணிப்பொறுப்பைப் புரிந்துகொள்ளுதல் முக்கியமானதாக உள்ளது. தொடக்ககால சபைக்கு, ஏழாம் நாள் அல்ல, ஆனால் வாரத்தின் முதல் நாளே ஆராதனை நாளாக இருந்தது. ஓய்வுநாள் என்பது கிறிஸ்தவர்களைக் கட்டுவிப்பதற்காக ஏற்பட்டது அல்ல (கொலோசெயர் 2:16ஐக் காணவும்), ஆனால் தேவன் தமது மக்கள் ஆராதனையில் கவனம் குவிக்க ஒரு நாளைக் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறார். (வெளிப்படுத்தின விசேஷம் 1:10ல் "கர்த்தருடைய நாள்" என்ற யோவானின் சொல்விளக்கத்தை ஆழ்ந்து சிந்தியுங்கள்.) நான்காவது கட்டளை ஒன்றுதான் புதிய உடன்படிக்கையில் மாறுபட்ட வகையில் நடைமுறைப்படுத்தப்படாத ஒரே கொள்கையாக உள்ளது. ஆறாவது கட்டளையின் ("கொலை செய்யாதிருப்பாயாக"; யாத்திராகமம் 20:13) கொள்கையானது புதிய ஏற்பாட்டில் உள்ளடக்கப் பட்டிருப்பினும், கிறிஸ்தவ நடைமுறையானது நியாயப்பிரமாணத்தினால் கேட்கப்பட்டதில் இருந்து சற்றே மாறுபட்டுள்ளது (காண்க மத்தேயு 5:21, 22).*